KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.28

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

பட்டினப்பாலை : தெய்வ வழிபாட்டில் கருப்பொருள் வழக்காறுகள்

Pattinapalai : Thematic Practices in the Worship of Gods

VIGNESH A[1,*], Dr N.Priya[2]

[1] (Reg No : BDU2310632780467) Full Time Research Scholar, Research Department of Tamil, Thanthai Periyar Government Arts and Science College (A), Tiruchirappalli – 620 023, (Affiliated to Bharathidasan University) Tamil Nadu, India.

[2] Associate Professor, Research Department of Tamil, Thanthai Periyar Government Arts and Science College (A), Tiruchirappalli – 620 023, (Affiliated to Bharathidasan University) Tamil Nadu, India,

***Corresponding author:** VIGNESH A, vigneshatamil@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 4 October 2026
Revised: 22 October 2026
Accepted: 25 October 2026

Article ID
KIJTS-2026-0002

Peer review
Double-blind peer review

Keywords
Karupporul
Custom
Deity
Worship
Landscape

ABSTRACT

Sangam-period people followed a landscape-based way of life. The landscapes were classified into five types: Kurinji, Mullai, Marutham, Neithal, and Palai. Among these, four are land-based landscapes. Each landscape possesses distinct resources. The elements that formed the basis of people's lives are called karupporul. The use of these gives rise to distinctive customs. The practices continuously followed by the people are called customs. Ancient Tamils possessed the skill of using an object according to their needs. Such an element has some customary background. Literature reveals these. This study is undertaken to establish that karupporul forms the basis of the customs of the ancient Tamils.

How to cite this article: VIGNESH A, & Dr N.Priya (2026). பட்டினப்பாலை : தெய்வ வழிபாட்டில் கருப்பொருள் வழக்காறுகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 314–324. https://doi.org/10.63300/kijts603112026.28
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

கட்டுரையாளர் : விக்னேஷ் அ (பதிவெண் : BDU2310632780467)

முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.), திருச்சிராப்பள்ளி – 620 023, (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) தமிழ்நாடு, இந்தியா ,

மின்னஞ்சல் : vigneshatamil@gmail.com

நெறியாளர் : முனைவர் நா. பிரியா

இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த.), திருச்சிராப்பள்ளி – 620 023, (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) தமிழ்நாடு, இந்தியா

ஆய்வுச்சுருக்கம்

சங்ககால மக்கள் திணைசார் வாழ்க்கையைப் பின்பற்றினர். திணையை குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல்,பாலை என ஐவகையாகப் பகுத்தனர். அவற்றுள் நிலம்பெறு திணைகள் நான்கு. ஒவ்வொரு திணையும் மாறுபட்ட வளங்களைக் கொண்டவை. மக்களின் வாழ்க்கைக்கு கருவாக அமைந்தவையே கருப்பொருள். அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தனித்துவமான வழக்காறுகள் தோற்றம் பெறுகின்றன. மக்களால் தொடர்ந்து பின்பற்றப்பட்ட செயல்முறையே வழக்காறுகள் எனப்படும். பண்டைத்தமிழர்கள் ஒரு பொருளை தங்களின் தேவைக்கேற்ப பயன்படுத்தும் பக்குவம் கொண்டவர்கள். அக்கருப்பொருள், ஏதேனும் ஒரு வழக்காற்றுப் பின்புலத்தைக் கொண்டுள்ளது. இலக்கியங்கள் அவற்றை வெளிப்படுத்துகின்றன. பழந்தமிழரின் வழக்காறுகளுக்கு கருப்பொருளே அடிப்படையாக அமைகின்றது என்பதை நிறுவும் விதமாக இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

குறிப்புச் சொற்கள் : கருப்பொருள், வழக்காறு, தெய்வம், வழிபாடு, திணை

முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டை எடுத்துரைக்கின்றன. கருப்பொருளின் வாயிலாக வெளிப்படும் வழக்காறுகளை உணர்ந்து கொள்ள சங்க இலக்கியம் வழிவகுக்கின்றன. தொல்காப்பியர் சுட்டும் முதல் கருப்பொருள் தெய்வம். இதன் அடிப்படையில் பட்டினப்பாலையில் இடம் பெற்றுள்ள தெய்வ வழிபாடுகளில் கருப்பொருள் பயன்பாட்டை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது. பல்வித வழிபாடுகளையும் அவற்றில் பயன்படுத்தப்பட்ட கருப்பொருள் வழக்காறுகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

கொற்றவை வழிபாடு

பழந்தமிழரிடையே பல தெய்வங்களை வழிபடும் வழக்கம் உண்டு. தமிழர்கள் தங்கள் உயிரை காக்கவும், வெற்றியை வேண்டியும் வழிபாடு நடத்தியதை இலக்கியச் சான்றுகள் வழி உணரமுடிகின்றது. பழந்தமிழர் தாய்தெய்வ வழிபாட்டைப் பின்பற்றினர். போருக்குச் செல்லும் வீரர்கள் கொற்றவையை வழிபடுவதை

‘மறம் கடைகூட்டிய குடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே’ (தொல்.பொருள் 62)

என்ற நூற்பா வெளிப்படுத்துகின்றது. . கொற்றவையை தொல்காப்பியர் போர்த்தெய்வமாகவும், பட்டினப்பாலை காவல் தெய்வமாகவும் விளக்குகிறது. பல பூதங்களால் காக்கப்படும் கொற்றவைக் கோயிலை

’பூதம் காக்கும் புகல் அருங் கடிநகர்

தூது உண் அம் புறவொடு துச்சிற் சேக்கும்’ (57-58)

என்ற அடிகள் உணர்த்துகின்றது. எவரும் புகமுடியாத காவலை உடையதாக அக்கோயில் இருப்பது மக்களின் அச்சத்திற்கு சான்றாகின்றது. இன்றுவரை காவல் தெய்வங்கள் வாழ்விடத்திற்கு வெளியில் இருப்பது சிந்திக்கத்தக்கது. இடையூறுகளில் இருந்து தம்மையும், ஊரையும் காவல் தெய்வங்கள் காக்கும் என்ற நம்பிக்கை இதற்குக் காரணமாக இருக்கலாம். இக்கருத்தையே

‘சிறுதெய்வக் கோயில்கள் பொதுவாக ஊர் மந்தை, ஊரின் எல்லை,குளக்கரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயல்புறம், அழிந்த கோட்டைகளின் வாசல்பகுதி இருந்த இடம், நெடுஞ்சாலை ஓரம் முதலிய இடங்களில் அமைந்திருக்கும். அந்த இடங்கள் அனைத்தும் காவலுக்குரிய இடங்கள் ஆகும்’ என்று தொ.பரமசிவம் (2023 : 16) எடுத்துரைக்கின்றார்.

நடுகல் வழிபாடு

ஒரு தொழிலை மேற்கொள்ளும் போது இறந்துபட்டவர்களுக்கு அத்தொழில் சார்ந்த பொருளை நினைவுச்சின்னமாக வைப்பது பழந்தமிழரின் மரபு. இவ்வழக்கத்தை

‘கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி

நடு கல்லின் அரண் போல’ (78-79)

என்னும் அடிகள் விளக்குகின்றன. போரில் இறந்துபட்ட வீரர்களின் நடுகல்லைச் சுற்றி வேல் நடப்படுகின்றது. குறிப்பாக அசைவப் படையலை ஏற்றுக்கொள்ளும் தெய்வங்களின் வாசலில் வேல் நடப்படுகிறது. இன்றும் கிராமங்களில் வேல்களில் எலுமிச்சைப்பழத்தைக் குத்தும் வழக்கம் உண்டு. எலுமிச்சைப்பழம் பலியைப் பிரதிபலிக்கின்றது. இன்றும் இறந்தவர்கள் பயன்படுத்திய பொருட்களை சேர்த்து அடக்கம் செய்யும் மரபு கிராமங்களில் உண்டு. அவர்தம் வழிபாட்டிலும் அவர்களுக்கு பிடித்த உணவு மற்றும் பிற பொருட்களை வைக்கின்றனர். இதன் மூலம் அவர்களை மகிழ்வடையச் செய்வதாக நம்புகின்றனர்.

ஆடவர்கள் போரில் கலந்து கொள்ளும் மரபினைக் கருத்திற்கொண்டு நடுகல் வழிபாடு அவர்களுக்கே உரித்தானது. அவர்களே வழிபாட்டிற்கு உரியவர்களானார்கள். இறந்தவரின் பேரும்,புகழும் பொறிக்கப்பட்ட கல்லில் அவரின் ஆன்மா உறைவதாக நம்பினர். இத்தைகைய வழக்கத்தை

‘இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஓர் பொருளில் நுழைந்து கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை உலகமெங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்படுகின்றது’ என்று வானமாமலை குறிப்பிடுவதாக முனைவர் க.காந்தி (2008 : 248) எடுத்துரைக்கின்றார்.

‘கொற்றவை’ தாய்தெய்வ வழிபாட்டில் கலாச்சார மாற்றம் ஏற்பட்டதுடன் நடுகல் வழிபாடு ஆண் தெய்வ வழிபாட்டிற்குத் தோற்றுவாயாக அமைகின்றது. அதன்

தொடர்ச்சியாக நடுகல் வழிபாடு இன்று தெய்வச் சிலையாக உருவம் பெற்றுள்ளதையும் சுட்டவேண்டியுள்ளது. பட்டினப்பாலை நெய்தல் நிலத்தை வெளிப்படுத்துவது. தொல்காப்பியர் சுட்டும் நெய்தல் நில தெய்வமான வருணன் வழிபாடு பட்டினப்பாலையில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுறாமுள் வழிபாடு

நடுகல் வழிபாட்டைத் தொடர்ந்து தொழில் தொடர்பான வழிபாட்டு வழக்கங்கள் உருவாயின. தொழிலில் தம் உயிருக்கு ஊறு விளைவிப்பனவற்றை வழிபடும் மரபு தோன்றியது. இதனால் அதன் தாக்குதலிலிருந்து காத்துக் கொள்வதாக நம்பினர். பரதவர்கள் மீன்பிடித்தொழில் தமக்கு இடையூறாகவும், மீனினங்களுள் வலிமை பெற்றுத் திகழும் சுறாவினை வழிபட்டதை

'சினைச் சுறவின் கோடு நட்டு

மனைச் சேர்த்திய உல் அணங்கினாள்' (87-88)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. சுறாவின் கொம்பை நட்டு பரதவர்கள் வழிபட்டனர். இவ்வழிபாடு சுறாவின் தாக்குதலில் இருந்து தம்மை காத்துக்கொள்வதாகவும், சுறாவிற்கு ஈடான வலிமையைத் தரும் என்றும் நம்பினர். இதை

'சுறா மருப்பைத் துண்டித்து அதனைப் பாதுகாத்து வருவதாலும், அதனை வழிபடுவதன் மூலமும் தம் வலிமையைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று கருதினர்'என்ற தனஞ்செயனின்**(2012 : 192)** கருத்து உறுதி செய்கின்றது. பழந்தமிழர் தாய்தெய்வ வழிபாட்டினர் என்பதற்கு சுறா முள் வழிபாடும் சான்றாகின்றது. சினைச்சுறா என்றவழி கருவினை உடைய சுறா என்பது புலனாகின்றது.பெண் சுறாவின் கொம்பை நட்டு வழிபட்டுள்ளனர். குடும்பத்தை விருத்தி செய்யும் வளத்தினைக் கொண்ட பெண்ணினத்தை போற்றி வழிபட்டனர். அதையே தொழில் ரீதியாகவும் பின்பற்றினர். மேலும் மீன்பிடித் தொழிலில் வளம் பெருக வேண்டும் என்பதற்காகவும் இவ்வழிபாடு நடைபெற்றுள்ளது.

சினைச்சுறாவை வழிபடுவதன் மூலம் கடலில் மீனின் இனப்பெருக்கம் நன்கு விருத்தி பெற்று அதிகளவின் மீன்கள் கிட்டும் என்று நம்பினர். இத்தகைய வழக்கத்தை

'சினை என்பது விருத்தி அல்லது செழுமையின் அடையாளமாகும். எனவே கடலில் மீன் வளம் பெருக வேண்டும் என்பதற்காகச் சினைச் சுறாவின் கோட்டை நட்டு வழிபட்டனர்' என்று தனஞ்செயன் (2012 : 192) குறிப்பிடுகின்றார்.

சினைச்சுறா வழிபாடு வளமையும், வலிமையும் அளிப்பதாக நம்பினர். பரதவர்கள் சுறாவினை வேட்டையாடியதாகத் தெரியவில்லை. எனினும் சுறாவின் கொம்பினை எவ்விதம் பெற்றனர் என்பது ஆராயத்தக்கது. இறந்த பின்னர் கொம்பினை எடுத்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

மரவழிபாடு

நடுகல்லை வழிபட்ட மக்கள் நாளடைவில் பிற பொருள்களின் உள்ளேயும் தெய்வத்தைக் கண்டனர். அதன் விளைவாக அவற்றைப் புனிதமாக கருதி வழிபாடு செய்தனர். இவ்வழக்கத்தை

’மலர் அணி மெழுக்கம், ஏறிப் பலர்தொழ

வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்’ (248-249)

என்னும் அடிகள் ‘கந்து’ என்னும் வழிபாட்டு முறையையும் நமக்குச் சுட்டுகின்றது.கந்து வழிபாடாவது பண்டைய தமிழர்களின் வழிபாட்டு முறையில் தெய்வத்தின் உருவத்தைச் செதுக்காமல், ஒரு மரக்கம்பம் மற்றும் தூணை தெய்வத்தின் அடையாளமாக நிறுத்தி வழிபடும் தன்மை இருந்தது. அதாவது தெய்வ அடையாளமாக நிறுத்தப்படும் மரத்தூண் என்றும் குறிக்கலாம். இதுவே மரவழிபாட்டின் தொடக்கமாக அமைகின்றது. பழந்தமிழரிடையே மரம் குறித்த சிந்தனை பெரிது. விரிச்சி கேட்டல், காவல் போன்ற நிலைகளில் மரத்தைப் பயன்படுத்தியுள்ளனர். சில மரங்களைக் குலக்குறியாகவும் பண்டைத்தமிழ்ச் சமூகத்தினர் வழிபட்டனர். அவ்வழக்கத்தை

‘குலக்குறியாக விளங்கிய மரம் இயற்கையாக அழிந்த பின்னர் அம்மரத்தின் பருத்த தூண்போன்ற பகுதியை வழிபடும் பழக்கமும் பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் இருந்துள்ளது’ என்று ஆ.சிவசுப்பிரமணியன் (2023 : 49) கருத்துரைக்கிறார்.

வேம்பு, ஆலமரம், அரசமரங்களில் தெய்வம் உறைவதாக நம்பினர். அவற்றை வழிபாட்டிற்கு உரித்தாக்கினர். பெண்களை வளமையின் இருப்பிடமாக கருதினர். பெண்களே வளர்ச்சியைக் கொடுப்பவர்களாக தினைக்காத்தல், திருமணம், அறுவடை போன்ற நிகழ்வுகளில் முதன்மை வகித்தனர். வழிபடும் மரங்கள் பெரும்பாலும் பால்மரங்களாக இருப்பது சிந்திக்கத்தக்கது. மரவழிபாடு வளமையின் அடையாளம். இன்றும் வளையல்களை மரக்கிளையில் மாட்டிவிடுதல், தொட்டில் கட்டுதல் போன்ற சடங்குகளைச் செய்கின்றனர். மேலும் மஞ்சள், குங்குமத்தால் மரத்தை அலங்காரம் செய்யும் முறையும் உள்ளது. இவை குலவிருத்தி வேண்டி நடைபெற்ற சடங்குகள் என்பதை உணரமுடிகின்றது. மரவழிபாட்டில் இடம்பெறும் பெண் தெய்வங்கள் பெரும்பாலும் சுமங்கலியாக இருப்பது சிந்திக்கத்தக்கது. கன்னி மற்றும் சுமங்கலிப் பெண்களையே வளத்தின் இருப்பிடமாக கருதிய சமூகத்தாரின் சிந்தனை இங்கு வெளிப்படுகின்றது.

கலாச்சார மாற்றம் : நெல் - அரிசி

பழந்தமிழர் வழிபாடு பலிகளைக் கொண்டது. தனக்கு விருப்பமான தெய்வத்தை பலியின் மூலம் அமைதிப்படுத்துவதாக நம்பினர். பலி கொடுப்பதால் நன்மை விளையும் என்று நம்பினர். இக்கருத்தை

"தெய்வங்களுக்கு பலியிடுதல் செய்வதனால் மக்கள் தமக்கு நன்மை உண்டாகுமென்று நம்பி பலியிடுதல் சடங்கினை முக்கியச் சடங்காகக் கொண்டுள்ளனர்" என்று ஞானசேகரன் (2000:93) குறிப்பிடுகின்றார்.

உயிர்ப்பலி கொடுத்து வந்த நிலை மாறி அவற்றைப் பதிலீடு செய்யும் மாற்று வழக்காறு தோன்றியது. இவற்றை

'கூழுடைக் கொழு பஞ்சிகை

தாழுடைத் தாள் பணியத்து

வால் அரிசிப் பலி சிதறி' (163-165)

என்னும் அடிகள் உணவைப் பாதுகாக்கும் பெட்டிக்கு வெண்ணிற அரிசி பலியாக தூவிய வழக்கத்தை வெளிப்படுத்துகின்றது. தம்மைப் பாதுகாக்க தெய்வத்துக்கு பலி கொடுத்த முறையே, பிற பொருளைப் பாதுகாக்கவும் பின்பற்றப்பட்டுள்ளது.

இதையே பின்னர் தெய்வ வழிபாட்டோடு தொடர்புபடுத்தினர். கோயில் கோபுரங்களில் தானியங்களைச் சேகரித்தனர். மழை, புயல் போன்ற ஆபத்து காலங்களில் அத்தானியங்களைப் பயன்படுத்தினர். பெட்டியில் அடைத்து வைத்த தானியத்தைப் பாதுகாக்க அரிசிப்பலித் தூவியதைப் பட்டினப்பாலை உணர்த்துகின்றது. இது ஒரு கலாச்சார மாற்றம். பழந்தமிழர் வழிபாட்டில் நெல்லும் பயன்படுத்தினர். பின்னர் அதுவே அரிசியாக மாற்றம் பெற்று வழக்காறு அல்லது பண்பாட்டு மாற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

எனினும் மரபை பின்பற்றும் விதமாக அரிசியில் மஞ்சள் தடவி பயன்படுத்தியதை திருமண நிகழ்வுகளில் காணலாம். மஞ்சள் நெல்லினை பிரதிபலிப்பதாக பார்க்கப்படுகின்றது. மேலும், உயிர்ப்பலி இன்றும் சிறுதெய்வ வழிபாட்டில் நடைமுறையில் உண்டு. பெருந்தெய்வ வழிபாட்டில் இத்தகைய கலாச்சார மாற்றம் உருவாகியுள்ளது.

வழிபாட்டில் இசைக்கருவிகள்

தெய்வ வழிபாட்டில் இசைக்கருவிகளும் இசைக்கப்பட்டன. பொதுவாக இசைக்கருவிகள் சப்தம் எழுப்பி உற்சாகத்தை அளிக்க கூடியது. தொடங்கும் செயல் வெற்றியடையும் என்ற நம்பிக்கை அடிப்படையிலும் எழுப்பப்படுகின்றது. மேலும் வழிபாட்டின் போது எழுப்பப்படும் மங்கல வாத்தியங்கள் உணர்வினைத் தூண்டக்கூடியவை. தெய்வத்தின் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்த உதவுகின்றன. தெய்வ வழிபாட்டில் இசைக்கருவிகள் முழங்கியதை

'குழல் அகவ, யாழ் முரல

முழவு அதிர,முரசு இயம்ப

விழவு அறா, வியல் ஆவணத்து' (156- 158)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இசைக்கருவிகளின் இயக்கம் மனதை ஒருமுகப்படுத்தும் விதமாக இசைக்கப்படுகின்றது. திருமண நிகழ்வுகளில் தாலி கட்டும் தருணங்களில் அனைவரது சிந்தனையும், அந்நிகழ்வை நோக்கியதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தொடர்ந்து இடைவிடாது இசைக்கப்படுகின்றது. ஒன்றை அறிவிப்பதற்கு இசைக்கருவி இசைக்கப்படுவது மரபு. அவ்வாறு இசைத்து அறிவிப்பதன் மூலம் அச்செயல் ஆற்றலைப் பெறுவதாக நம்புகின்றனர். இதனடிப்படையில் போருக்குச் செல்லும் வீரர்களின் முரசு முழக்கமும் அமைகின்றது. இதற்கு அடுத்த நிலையில் இசைக்கருவியின் சப்தம் கவனத்தை ஈர்க்கும் கருவியாகச் செயல்பட்டுள்ளது.

பூக்கள் : வளமையின் குறியீடு

வழிபாட்டில் நெல்லுக்கு அடுத்தபடியாக இடம்பெறுவது பூக்கள். தெய்வங்களுக்கு வழிபாட்டின்போது தூவப்படுகின்றது. பூவின் வளர்ச்சி மற்றும் மலர்ச்சியைப் போல தங்கள் வாழ்வும் வளம் பெற வேண்டி பூக்களைத் தூவுகின்றனர். பூக்களால் தெய்வத்தை அலங்கரிக்கின்றனர். இவ்வழக்கத்தை பட்டினப்பாலையின்

‘மை அறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய

மலர் அணி வாயில் மலர்தொழு கொடியும்’ (159-160)

என்னும் அடிகள் எடுத்துரைக்கின்றன. அலங்காரப் பொருளாகவும், படையல் பொருளாகவும் பூக்களைப் பயன்படுத்துகின்றனர். பூ வளமையின் குறியீடு. இதன் காரணமாக வீட்டு வாசல், கடைகளின் வாசல் போன்ற இடங்களில் பூக்களை வைக்கின்றனர். வளங்களை அளிக்கும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு பயன்படுத்துகின்றனர்.

தெய்வ வழிபாட்டில் இறைவனுக்கு சூடுவதும், தாங்களும் பூச்சுடிக்கொள்வதும் மரபு. குறிப்பாக நெய்தல் நில பரதவர்கள் சுறாமுள் வழிபாட்டின் போது வெண்கூதாளப் பூக்களை அணிந்துகொண்டதை

‘மடல் தாழை மலர் மலைந்தும்

புன் தலை இடும் பரதவர்’ (89-90)

என்னும் அடிகளில் அறியமுடிகின்றது. பூக்கள் அரும்பு,மொட்டு, மலர் என்ற பல வளர்ச்சி நிலைகளைக் கொண்டது. வாழ்வில் வளர்ச்சி வேண்டி தெய்வ வழிபாடுகளில் பூக்கள் இடம்பெற்றிருக்கலாம் என்று கருத இடமுள்ளது.

வழிபாட்டில் கள்

தெய்வத்திற்கு தாங்கள் வாழும் நிலத்தில் விளையும் பொருள்களையே படைத்தனர். அவ்வாறு படைத்த பொருளை ஒன்றாக கூடி உண்டு மகிழ்வது வழக்கமாகும். பழந்தமிழரின் உணவில் ‘கள்’ முக்கியப் பங்காற்றுகின்றது. அன்றாடம் வீட்டில் உண்ணும் வழக்குடையவர்கள். விழாக்காலங்களில் கள் உண்ணும் வழக்கம் கொண்டவர்கள். தெய்வ வழிபாட்டிலும் கள் படைக்கப்பட்டதை

‘உவவு மடிந்து உண்டு ஆடியும்’ (93)

என்னும் அடிக்கு கள் உண்டு ஆடியதாக உரையாசிரியர்கள் ஒருமித்த கருத்து தெரிவிக்கின்றனர். பெண் தெய்வங்களுக்கும் கள் படைக்கும் வழக்காறு உண்டு. இக்கருத்தையே

‘மதுக்கொடையானது பெண் தெய்வங்களுக்கே உரியது’ என்று ஆ.சிவசுப்பிரமணியன் (2010 :123) உறுதிப்படுத்துகிறார். சங்க காலத்தில் பெண்கள் கள் உண்டதற்கும் சான்றுகள் இலக்கியங்களில் கிடைக்கின்றன. பெருந்தெய்வங்களுக்கு கள் படைக்கப்படுவதில்லை. மது (கள்) படைப்பதில் இருவேறு நிலைகள் உள்ளன. ஒன்று கள் தயாரித்து கோவிலுக்கு கொண்டுச் செல்வது. மற்றொன்று கோவிலில் மது தயாரித்து வழிபடுவது.

பெண் தெய்வ கோயில்களில் மது தயாரித்து படைக்கப்பட்டதை **‘பெண் தெய்வக் கோயில்களில் ‘மதுவூட்டு’, ‘மது கொடை’ என்ற பெயர்களில் மது தயாரித்துப் படைக்கும் சடங்கு இன்றுவரை நடந்து வருகிறது’ என்று ஆ.சிவசுப்பிரமணியன் (2023 : 111)** உறுதி செய்கிறார்.

முடிவுரை

பழந்தமிழர் வழக்காறுகளில் தெய்வம் முதன்மை பெறுகின்றது. ஒரு கருப்பொருள் வழிபடு தெய்வமாகவும், பிற கருப்பொருள் வழிபாட்டிற்குரிய பொருளாகவும் பயன்படுத்தியுள்ளனர். நெல், பூ, கள், இசை, மரம் போன்ற கருப்பொருள்கள் தெய்வ வழிப்பாட்டு வழக்காறுகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன. கருப்பொருளின் வாயிலாக தெய்வத்திடமிருந்து வளமையும், ஆற்றலும் பெறுவதாக நம்புகின்றனர். தாய் தெய்வ வழிபாட்டிலும், தொழில் ரீதியான வழிபாட்டிலும் கருப்பொருள் கொண்டே வழிபாடு செய்துள்ளனர். விரிச்சி கேட்டு வழிபட்ட மரம், நாளடைவில் வளமையின் காரணமாக தெய்வம் உறையும் இடமாக கருதினர். பட்டினப்பாலையில் இடம்பெறும் தெய்வ வழிபாடுகள் உணவு, தொழில், பூ, இசை (பண்) போன்ற கருப்பொருளால் வழக்காறுகளாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளதை இக்கட்டுரை மெய்ப்பிக்கின்றது.

துணை நூற்பட்டியல்

References

காந்தி க. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதல் பதிப்பு 2008

சிவசுப்பிரமணியன் ஆ, பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் இறந்தோர் வழிபாடும் முன்னோர் வழிபாடும், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, முதல் பதிப்பு 2023

சிவசுப்பிரமணியன் ஆ, மந்திரமும் சடங்குகளும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதல் பதிப்பு 2010

ஞானசேகரன் தே. மந்திரம் சடங்குகள் சமயம், பார்த்திபன் பதிப்பகம், திருச்சி, முதல் பதிப்பு 2000

தனஞ்செயன் ஆ, குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, முதல் பதிப்பு 2012

திருஞான சம்பந்தம் ச, தொல்காப்பியம் பொருளதிகாரம், கதிர் பதிப்பகம்,திருவையாறு,முதல் பதிப்பு 2018

பரமசிவன் தொ, தெய்வங்களும் சமூக மரபுகளும், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, முதல் பதிப்பு 2023

நாகராசன் வி, பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, முதல் பதிப்பு 2004